
# பெருமை நிறைந்த




பெருமை நிறைந்த எம்பெருமானின் புகழை,

பெருமாள் திருமொழியென எமக்களித்தவரே!

பெருமை.......

வஞ்சிக்களமென்ற சிற்றூரின் மன்னனாக,

சேரநன்நாட்டில் ஆட்சிபுரிந்த குலசேகரரே

வஞ்சிக்கப்பட்ட அந்தணர்களுக்கு உதவிட,

தீரமுடன் ஸர்பக்குடத்தில் கரமிட்டவரே!

பெருமை.........

கதைகேட்கும் நாட்களில் உம்மையுமறந்து,

ரகுராமனுக்குதவிட படை தயார் செய்தவரே

எதைசொன்னால் பெருவாழ்வு பெறலாமென,

முகுந்தமாலையில் அழகுற தெரிவித்தவரே!

பெருமை........